**தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியம் - 2014**

தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானச் செலவினக் கணக்கு மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசோட்டத்தினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிலையான வைப்பிற்காக ஆண்டிற்குரிய வட்டி வருமானம் ரூபா 427,500 ஆக இருந்த போதிலும் அது ரூபா 378,750 ஆகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் வங்கிக் கூற்றின்படி 2014 திசெம்பர் 19 ஆந் திகதி கிடைத்த ரூபா 48,750 தொகையான வட்டி வருமானம், வருமானமாகக் கணக்கீடு செய்யப்படாது மீளாய்வாண்டின் திசெம்பர் மாத வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் இனங்காணப்படாத பெறுவனவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வங்கிக் கணக்கிணக்கக் கூற்றின்படி இனங்காணப்படாத பெறுவனவாகக் காட்டப்பட்ட ரூபா 508,610 தொகையில் ரூபா 106,682 தொகை 2013 திசெம்பர் மாதத்தில் கிடைத்திருந்ததுடன் ரூபா 401,928 தொகை 2014 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்தது. இந்தப் பணம் இனங்கண்டு கணக்கீடு செய்யப்படாமையினால் 2013 ஆம் ஆண்டின் கொடி விற்பனை வருமானம் ரூபா 106,682 இனாலும் 2014 ஆம் ஆண்டில் கொடி விற்பனை வருமானம் ரூபா 353,178 இனாலும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| தேசிய சிறுவர் அபிவிருத்தி நிதியத்தின் வழிகாட்டிக் கோவை | நிதியத்தை கட்டுப்படுத்தல், அமைச்சுகளுக்கிடையேயான கண்காணிப்புக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் ஆகக் குறைந்தது ஒரு மாதத்திற்கு ஒரு தடவை அக் குழு கூட்டப்பட்டு விண்ணப்பப் பத்திரங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது ஒரு தடவையேனும் குழு கூடியிருக்காததுடன் மீளாய்வாண்டில் புதிதாக உதவி வழங்குவதற்காக சிறுவர்கள் தெரிவு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 1,077,828 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டில் மிகை ரூபா 689,129 ஆனமையால் நிதிவிளைவுகளில் ரூபா 1,766,957 தொகையான வீழ்ச்சி காணப்பட்டது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

நிதியத்தின் முக்கிய வருமான மார்க்கம் சிறுவர் தினக் கொடி விற்பனையானதுடன் மீளாய்வாண்டின் உலக சிறுவர் தினக் கொடி விற்பனைக்காக 335 மாவட்டச் செயலகங்கள் மற்றும் பிரதேச செயலகங்களுக்கு 380,000 கொடிகள் ரூபா 29,080 தபால் கட்டணம் செலுத்தப்பட்டு அனுப்பிவைக்கப்பட்டிருந்தன. இக் கொடி விற்பனையின் மூலம் பெறப்பட்ட தொகையில் 50 சதவீதம் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் சிறுவர் அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும் எனக் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 75 செயலகங்களிலிருந்து மாத்திரமே செலவு வைக்கப்பட்டிருந்தது. 2015 யூலை 30 ஆம் திகதி வரையில் மேலும் 211 செயலகங்களிலிருந்து பணம் அனுப்பி வைக்கப்பட்டிருந்த போதிலும் 50,000 கொடிகள் அனுப்பப்பட்ட 49 செயலகங்களிலிருந்து பணம் அனுப்பி வைக்கப்பட்டிருக்கவில்லை. அதன்படி கொடி விற்பனை வருமானம் சேகரித்தல் தொடர்பாக நிதியத்தினால் முறையான திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறறிக்கையின்படி கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்கள் 2015 யூலை 03 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிராமையால் மீளாய்வாண்டின் போது அடைந்துகொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் மற்றும் உள்ளபடியான அடைந்து கொள்ளல் தொடர்பான மதிப்பீடொன்றை மேற்கொள்ள முடியாதிருந்தது.

### 5.3 ஆண்டறிக்கையை சபையில் சமர்ப்பித்தல்

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைகளின் 4.4 (அ) பந்தியின் படி ஆண்டறிக்கை கண்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடன் நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் கணக்காண்டு முடிவடைந்து 05 மாதங்களுக்குள் பாராளமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2007 ஆம் ஆண்டு முதல் அவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அமைச்சுச் செயலாளருக்கு அவ்வப்போது அறிவிக்கப்பட்டது. வருமானம் சேகரித்தல் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.